# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை– 600 035. தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 13.05.2026**

**முன்னிலை**
**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 2263/விசாரணை/E/2024**

| | | |
|---|---|---|
| திரு கு.பாலசுப்பிரமணியன் | .. | மேல்முறையீட்டாளர் |
| /எதிர்/ | | |
| பொதுத் தகவல் அலுவலர்/<br>தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,<br>மேலூர் வட்டம்.<br>மதுரை மாவட்டம் | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வழக்கு குறித்து இவ்வாணையத்தில் 10.02.2026 அன்று விசாரணை நடைபெற்றபோது, மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் மனுதாரரிடம் 27.03.2026 அன்று விசாரணை நடத்தவுள்ளார் என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்ததன் அடிப்படையில், அந்த விசாரணையை முடித்து அதன் பின், மனுதாரரின் மனு மீது அன்று வரை (27.03.2026) மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை மனுதாரருக்கு தெரிவித்துவிட்டு, அது குறித்த அறிக்கையை 03.04.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க வேண்டுமென பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிட்டிருந்தது.

2) அதனை தொடர்ந்து, மேலூர் வட்ட தலைமையிடத்து துணை வட்டாசியர் திரு க.ஜெயகாந்தன் 13.05.2026 அன்று ஆணையத்தில் ஆஜராகி, மதுரை மாவட்ட வருவாய் அலுவலரின் 11.05.2026 நாளிட்ட அறிக்கையை ஆணையத்தில் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் பணி காரணமாக 27.03.2026 அன்று நடைபெறவிருந்த விசாரணை தற்போது 03.07.2026 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும்

அன்றையதினம் எவரெனும் வாய்தா கோராமலும், ஆட்சேபம் தெரிவிக்காமலும் இருக்கும்பட்சத்தில், இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், 03.07.2026 அன்று விசாரணை நடைபெற்ற பின், மதுரை மாவட்ட வருவாய் அலுவலர், மனுதாரருக்கு இவ்வாணையத்தின் 10.02.2026 நாளிட்ட உத்தரவில் தெரிவித்தது போல், விவரங்களை தெரிவித்துவிட்டு, அது குறித்த அறிக்கையை இவ்வாணையத்தில் **30.07.2026-**க்குள் சம்மந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மூலம் சமர்பிக்க வேண்டுமென உத்தரவிட்டு, இந்த மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து ஆணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் SA 2263/விசாரணை/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
மேலூர் வட்டம்
மதுரை மாவட்டம்

திரு கு.பாலசுப்பிரமணியன்.
எண்.4/404, ஹரிஹர் ராயல் அபார்ட்மெண்ட்ஸ்,
பட்டணம் இட்டேரி சாலை,
ஒண்டிப்புதூர்,
கோயம்புத்தூர் - 641 016

Copy to File
CR/PA